




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வங்கி கணக்குதாரர்களையும் மின்னனு பண பரிமாற்ற முறையில் பணமில்லா பரிவர்தனையை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான பயற்றுநர்களுக்கான (வட்டார வளர்ச்சி அலுவலர்கள்) இரண்டு நாட்கள் பயிற்சி (03.01.2017 மற்றும் 04.01.2017) நாகர்கோவில், கோர்ட் ரோடு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இன்று (03.01.2017) நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 04/2017 நாள்: 03.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வங்கி கணக்குதாரர்களையும் மின்னனு பண பரிமாற்ற முறையில் பணமில்லா பரிவர்தனையை ஊக்கப்படுத்தும் வகையில், நடைபெற்ற மாவட்ட அளவிலன பயிற்றுநர்களுக்கான பயிற்சியினை இன்று (03.01.2017) குத்துவிளக்கேற்றி வைத்து, துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வங்கி கணக்குதாரர்களையும் மின்னனு பண பரிமாற்ற முறையில் பணமில்லா பரிவர்தனையை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான பயற்றுநர்களுக்கான (வட்டார வளர்ச்சி அலுவலர்கள்) இரண்டு நாட்கள் பயிற்சி (03.01.2017 மற்றும் 04.01.2017) நாகர்கோவில், கோர்ட் ரோடு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இன்று (03.01.2017) குத்துவிளக்கேற்றி வைத்து, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

நமது மாவட்டம், கல்வியில் சிறந்து விளங்குவதோடு, 93 சதவீதம் எழுத்தறிவு பெற்றுள்ளது. குறிப்பாக நமது மாவட்டத்திலுள்ள மக்கள் எளிதில் அனைத்து திட்டங்களையும் புரிந்து கொள்வார்கள். மத்திய அரசு, மின்னனு பணபரிமாற்ற முறையில் பணமில்லா பரிவர்தனையை ஊக்கபடுத்துவதுடன், தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மென்மேலும் வளர மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் அடையாளமாக நமது மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வங்கி கணக்குதாரர்களுக்கும் இன்று பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் அளிக்கப்படும் முறையினை நன்றாக கற்றுக்கொள்வதோடு, மற்றவர்களிடமும் எடுத்துக் கூறி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பயிற்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், நபார்டு வங்கியின் மேலாளர் திரு. மார்டின், உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு. ஆறுமுகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், வங்கி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.